00017

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள்சார் கல்வியில் கல்வி முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024

இறுதிப் பரீட்சை - 2025

மட்டம் - 10

**SNPA609– விசேட தேவைகள்சார் கல்வியில் பண்பு சார் ஆய்வுமுறைகள்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

---

திகதி:- 17.03.2025 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

---

முதலாம் வினாவிற்கும் ஏனைய எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

**1.** விசேட தேவைகள்சார் கல்வியில் கல்வியாளராக, உங்கள் நிறுவனத்தலைவர் பின்வரும் அம்சங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து பண்புசார் ஆய்வினை முன்னெடுக்குமாறு உங்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார் எனக்கொள்வோம்.

a. விசேட கல்வி அலகு முறைமை

b. உள்ளடங்கற் கல்வி முறைமை

c. தனியாள் மையக்கல்வி நிகழ்ச்சித்திட்டம்

d. உதவி தொழிநுட்பத்தின் அமுலாக்கம்

அ. மேலே குறிப்பிடப்பட்ட அம்சங்களில் ஏதேனும் ஒன்று தொடர்பான ஆய்வுப் பிரச்சினையினை அடையாளப்படுத்துக.

**(05 புள்ளிகள்)**

ஆ. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வுப் பிரச்சினையின் முக்கியத்துவத்தை விளக்குக.

**(04 புள்ளிகள்)**

இ. ஆய்வின் நோக்கத்தைக் குறிப்பிட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வுப்பிரச்சினைக்கான நான்கு (04) ஆய்வுக் குறிக்கோள்கள்/வினாக்களை முன்வைக்குக.

**(08 புள்ளிகள்)**

ஈ. உங்கள் ஆய்வுப் பிரச்சினைக்குப் பொருத்தமான பண்புசார் ஆய்வு வடிவமைப்பைத் தேர்வுசெய்து, உங்கள் தேர்வுக்கான மூன்று (03) காரணங்களை குறிப்பிட்டு, அவற்றிற்கான நியாயங்களை முன்வைக்குக.

**(04 புள்ளிகள்)**

உ. ஆய்வில் பங்கேற்பாளர்களைக் குறிப்பிட்டு, அத்தேர்வுச் செயன்முறையைச் சுருக்கமாக விளக்கி, உங்கள் தேர்வுகளை நியாயப்படுத்துக.

**(05 புள்ளிகள்)**

ஊ. உங்கள் ஆய்வுக்கான தரவு சேகரிப்பு முறைகளை விளக்கி, தரவு எவ்வாறு சேகரிக்கப்படும் என்பதை விவரிக்குக.

**(06 புள்ளிகள்)**

எ. உங்கள் ஆய்வுக்கான பண்புசார் தரவுப் பகுப்பாய்வுச் செயன்முறைகளை விவரிக்குக.

**(06 புள்ளிகள்)**

ஏ. உங்கள் ஆய்வின் முடிவுகளைப் பரப்புவதற்கான உங்கள் திட்டத்தைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)
(மொத்தம் 40 புள்ளிகள்)

2. அ. "பண்புசார் ஆய்வு அணுகுமுறை" என்ற எண்ணக்கருவை விளக்குக.

(05 புள்ளிகள்)

ஆ. பண்புசார் ஆய்வு அணுகுமுறையின் தனித்துவமான அம்சங்களை விளக்குக.

(07 புள்ளிகள்)

இ. விசேட தேவைகள்சார் கல்வித் துறையில் பண்புசார் ஆய்வு அணுகுமுறையின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுக்களுடன் முன்வைத்து விளக்குக.

(08 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

3. பண்புசார் ஆய்வு அணுகுமுறைகளில் விசேட கல்வித் துறையில் பயன்படுத்தக்கூடிய **இரண்டு** (02) பிரபல்யமான ஆய்வு வடிவமைப்புக்களைத் தேர்ந்தெடுக்கவும். அதனை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

அ. **இரண்டு** (02) ஆய்வு வடிவமைப்புக்களைக் குறிப்பிட்டு, நீங்கள் ஏன் அந்த ஆய்வு வடிவமைப்புக்களை தேர்ந்தெடுத்தீர்கள் என்பதை நியாயப்படுத்துக.

(06 புள்ளிகள்)

ஆ. தேர்ந்தெடுக்கப்பட்ட வடிவமைப்புக்கள் ஒவ்வொன்றின் **மூன்று** (03) தனித்துவமான பண்புகளை விளக்குக.

(07 புள்ளிகள்)

இ. ஒவ்வொரு ஆய்வு வடிவமைப்பின் **மூன்று** (03) பலங்கள் மற்றும் **மூன்று** (03) வரையறைகளை விளக்குக.

(07 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

4. அ. பண்புசார் ஆய்வில் பயன்படுத்தப்படும், நிகழ்தகவுசாரா (Non - Probability) மாதிரியின் பல்வேறு வகைகள் யாவை?

(06 புள்ளிகள்)

ஆ. பண்புசார் ஆய்வு அணுகுமுறையில் மிகவும் பிரபலமான **இரண்டு** (02) மாதிரி எடுப்பு முறைகளை எடுத்துக்காட்டுக்களை மேற்கோள் காட்டி விளக்குக.

(07 புள்ளிகள்)

இ. ஒவ்வொரு மாதிரி நுட்பத்தின் **நான்கு** (04) பலங்கள் மற்றும் **நான்கு** (04) வரையறைகளை விளக்குக.

(07 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

**5.** "ஆய்வில் தரவு ஒரு முக்கிய காரணியாகும். எனவே, தரவுச் சேகரிப்பு மற்றும் தரவுப் பகுப்பாய்வு ஆகியவை ஆய்வின் முக்கியமான பகுதிகளாகின்றன."

**அ.** பண்புசார் ஆய்வு அணுகுமுறையில் வழக்கமாகப் பயன்படுத்தப்படும் **இரண்டு** (02) தரவு சேகரிப்பு முறைகளை விளக்கி, அவை எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை விவரிக்குக.

**(06 புள்ளிகள்)**

**ஆ.** பண்புசார் ஆய்வு அணுகுமுறையின் தரவு சேகரிப்பாளரின் தனித்துவமான அம்சங்களை எடுத்துக்காட்டுக்கள் மூலம் விளக்குக.

**(07 புள்ளிகள்)**

**இ.** விசேட தேவைகள்சார் கல்வித் துறையில் ஆய்வியல் ஆய்வொழுக்கத்தின் முக்கியத்துவம் மற்றும் பண்புசார் தரவுகளின் நம்பகத்தன்மையை எவ்வாறு பேணுவது என்பதை எடுத்துக்காட்டுக்கள் மூலம் விளக்குக.

**(07 புள்ளிகள்)**
(மொத்தம் **20** புள்ளிகள்)

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -